தேதி - 18.07.2025.

அசல் வழக்கு எண்.148/2010

வா.சா.2 - திரு. சந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 29 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பி.வா.சா.ஆ.1ல் உள்ள முத்துலெட்சுமி என்ற கையெழுத்து என் மனைவியுடைது என்றால் அது என் மனைவி போட்ட கையெழுத்து அல்ல. அந்த கையெழுத்தை பரிசோதனை செய்ய நான் மனு எதும் தாக்கல் செய்யவில்லை. அந்த கையெழுத்து சம்பந்தமாக போலீஸ்சில் புகார் கொடுத்துள்ளேனா என்று கேட்டால் கொடுத்துள்ளேன். ஆனால் அதை இதுவரை தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1ல் திருப்பதி என்பவர் கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் கையெழுத்து போட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். 3 ம் பிரதிவாதியிடமிருந்து 29 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் E Schedule ஆக காட்டப்பட்டுள்ள சொத்து திருப்பதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது ( அந்த ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என சாட்சி விளக்கம் அளிக்கிறார்). அந்த E schedule சொத்து இந்த வழக்கின் 6, 7 இலக்க சொத்துக்கள் ஆகும். தாவா 6, 7 இலக்க சொத்துக்களில் திருப்பதியும் அவரது அம்மா, அப்பாவும் குடியிருந்து வந்தார்கள். திருப்பதியின் அம்மா, அப்பா இறந்த பிறகு திருப்பதியும் அவரது குடும்பத்தினரும் குடியிருந்து வந்தனர். 29 ம் பிரதிவாதி குடியிருந்த வீட்டின் கிழக்கு பக்க சுவரும், வடக்கு பக்க சுவரும் தாவா 6,7 இலக்க சொத்திற்கான சுவரும் பொது சுவர் ஆகும். பி.வா.சா.ஆ.1ல் 1ம் வாதி முத்துலெட்சுமி கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.1-ன் படி ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டது என்றும் அதன்படி அவர் அவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகின்றனர் என்று சொன்னால் அது சரியல்ல. 6, 7 இலக்க சொத்துக்கள் திருப்பதிக்கு உரியது என்றும் அவரிடமிருந்து தக்க மறுபயனுக்கு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் 29 ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல (வழக்கு நிலுவையில் இருக்கும்போது அந்த

கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார்). வா.சா.ஆ.61 முதல் 65 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- சந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.